செய்தி வெளியீடு எண் : 1121 நாள் : 02.08.2024

செய்தி வெளியீடு

**தமிழ்நாட்டில் மழைக்காலம் தொடங்கவிருப்பதால் மழைக்காலத்திற்கு முன்பாக நெடுஞ்சாலைத்துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு சீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு ஆய்வு செய்தார்கள்.**

சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையப் பயிற்சி வளாகக் கூட்ட அரங்கில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், இன்று (2.8.2024) நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு (அலகு) தொடர்பான, தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள் ஆகியோர்களின் பணிகள் முன்னேற்றம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நெடுஞ்சாலைத்துறையில் புதியதாகப் பொறுப்பேற்றுள்ள பொறியாளர்கள் அனைவரும் அவர்களுடைய கடமையை

உணர்ந்து சிறப்புடன் செயலாற்ற வாழ்த்துகளைத் தெரிவித்து, ஆய்வுப் பணியை தொடங்கினார்கள்.

மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னதாக நெடுஞ்சாலைத்துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை பணிகள், சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை உடனடியாக ஆய்வு செய்து சீரமைக்க வேண்டிய பணிகள் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து உடனடியாக சீரமைப்பு செய்ய வேண்டும் என்றும், மழை நீர் வடிகால்களை சுத்தம் செய்து அவற்றில் தங்கு தடையின்றி மழைநீர் வெளியேற வழிவகை செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். மேலும் சாலைகளில் மழைநீரால் பாதிப்பு ஏற்பட்டால் அவற்றை உடனடியாக சரிசெய்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்திரவிட்டார்கள்.

"நம்ம சாலை செயலி" என்ற புதிய திட்டம் நெடுஞ்சாலைத்துறையில் தொடங்கப்பட்டு, சாலைகளில் உள்ள பள்ளங்களைச் சரிசெய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "பள்ளமில்லாச் சாலை, பாதுகாப்பான பயணம்" என்ற குறிக்கோள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தில் சிறப்பு கவனம் செலுத்தி, அனைத்துப் பொறியாளர்களும் பணியாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

சாலைப் பாதுகாப்புப் பணிகள், குறிப்பாக "ரோடு மார்க்கிங்" (Road Marking) உரிய தரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், சென்னை மண்டலம் மற்றும் திருநெல்வேலியில் நடைபெற்று வரும் வெள்ள சீரமைப்புப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

சாலையில் உள்ள மரங்களுக்கு கருப்பு–வெள்ளை வர்ணப்பட்டை அடித்தல், சாலைகளில் உள்ள வேகத் தடைகளுக்கு வர்ணம் பூசுதல் போன்ற பணிகளை விரைவாக செய்து, விபத்து ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள்.

அனைத்து சாலைகளிலும், சாலையின் எல்லை (Boundary) குறிக்கும் பணி விரைவில் முடிக்கப்பட வேண்டும். சாலை ஓரங்களில் போக்குவரத்து இடையூராக உள்ள மரங்கள் மற்றும் மரக்கிளைகள் அகற்றப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்கள்.

மறுசீரமைப்புப் பணிகளை உடனுக்குடன் முடித்து, ஒவ்வொரு பணிக்கும் தரக்கட்டுப்பாடு சான்றிதழ் பெறப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

அகலப்படுத்தும் பணிக்காக தேர்வு செய்யப்பட்ட சாலையில் உள்ள மரங்கள், மின் கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகள் மாற்றியமைக்கும் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அமைச்சர் அவர்கள், அனைத்துப்

பணிகளுக்கும் பணப்பட்டுவாடா செய்யும்முன் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு அலுவலர்களைக் கொண்டு தரத்தினை உறுதி செய்த பின்னரே பணப்பட்டுவாடா செய்ய வேண்டும் என்று ஆணையிட்டார்கள்.

அளவுப் புத்தகங்களை உதவிப் பொறியாளர்கள் மட்டுமே உடனுக்குடன் எழுத வேண்டும் என்றும், தவறுகள் நிரூபிக்கப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்கள்.

மேம்பாட்டு பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களிடம் சாலைகளை ஒப்படைத்தப் பின்னர், அச்சாலைகளில் ஏற்படும் நொடிகளை(சிறுபள்ளம்) அவ்வப்போது சீர்செய்யப்பட வேண்டும். பணி முடிக்கும் வரை பள்ளமில்லாச் சாலைகளாகப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு ஒப்பந்ததாரருக்கு உள்ளது. அதை உறுதிச் செய்ய வேண்டியது அந்தப் பொறியாளரின் கடமையாகும் என்று தெரிவித்தார்கள்.

பாலப் பணிகளில் ஏற்படும் காலதாமதம் மற்றும் நிதிச்சுமையை தவிர்க்க வேண்டும் என்று உத்தரவிட்ட அமைச்சர் அவர்கள், உரிய தள ஆய்வு மற்றும் பரிசோதனைகளை மேற்கொண்டு, முறையான மதிப்பீடு தயாரிக்க வேண்டும் என்றும், நிலஎடுப்புப் பணிகள் மற்றும் சேவை சாதனங்களை மாற்றி அமைக்கும் பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும். ஒப்பந்ததாரர்களுடன் கலந்துபேசி

இடர்பாடுகளை களைய வேண்டும். ஒப்பந்தத்தில் ஒவ்வொரு நிலைக்கும் (milestone) வரையறுக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். ஒப்பந்தப் பணிகளில் முன்னேற்றம் இல்லாதபோது விளக்கம் கேட்பதுடன் ஒப்பந்த விதிகளின்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள்.

நெடுஞ்சாலைத்துறையில் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட உள்தணிக்கை (Internal Audit) மிகவும் பாராட்டத்தக்கதாக உள்ளது என்பதை குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள், உள்தணிக்கை முறை மூலம் அனைத்து கணக்குகளும் பராமரிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உரையை தொடர்ந்து, ஒவ்வொரு கோட்டப்பொறியாளர்களின் பணிகளையும், பணிகளுடைய முன்னேற்றம் தொடர்பாகவும், ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு பணிக்கும் கால இலக்கு நிர்ணயித்து, அந்த காலக்கெடுவிற்குள் பணிகள் முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறை அரசு செயலாளர் டாக்டர் ஆர்.செல்வராஜ், இ.ஆ.ப., திட்ட இயக்குநர் திரு.எஸ்.ஏ.இராமன், இ.ஆ.ப., சிறப்பு அலுவலர்(டெக்னிக்கல்) திரு.இரா.சந்திரசேகர், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம்

மற்றும் பராமரிப்பு) திரு.சத்தியப்பிரகாஷ், முதன்மை இயக்குநர் திரு.இரா.செல்வதுரை, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் திரு.எம்.சரவணன், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu